1979 நவம்பர் 2]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : நான் சொல்லும்போது சொன்னேன், மூலக்கேள்விக்கு சம்பந்தம் இல்லாவிட்டாலும் உறுப்பினர்கள் விவரங்கள் கேட்கிறபோது, மக்களுக்கு தேவைப்பட்ட விவரங்கள் என்று தெரிவித்திருக்கிறேன்.

சாப்டூரில் உள்ள தோப்புகள்

* **வினா எண். 64—திரு. இரா. முத்தையா :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நில உச்சவரம்புச் சட்டத்தில் தோப்புகளுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் யாது ?

(இ) மதுரை மாவட்டம், சாப்டூரில் நில உச்சவரம்பை மீறி ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலம் பழைய ஜமீன்தாரிடம் தோப்பு என்ற கணக்கில் உள்ளதா ?

(ஈ) இதில் முறைகேடு எனும் அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) ஆம்.

(ஆ) 1—7—1959-ல், அல்லது அதற்கு முன்பும் தோப்பாக இருந்த நிலங்களுக்கு நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் அவை தோப்பாக தொடர்ந்து இருக்கும் வரையில் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

(இ) 394.51 ஏக்கர்களுக்கு விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது.

(ஈ) எந்தெந்த நிலங்கள் தற்சமயம் தோப்பாக பராமரிக்கப்படவில்லையோ அவைகள் மறு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு நடவடிக்கையில் உள்ளன. மற்றும் மேற்படி நிலங்களில் விவசாயத்திற்கு இலாயக்கான நிலங்களைப் பார்வையிட்டு அவைகளின் விதிவிலக்கை ஏன் ரத்து செய்யக் கூடாது என்று நில உடைமையாளர்களுக்கு தாக்கீது அனுப்பப்பட்டு விசாரணையில் உள்ளது.

திரு. இரா. முத்தையா : இந்தத் தோப்புக்கு விதிவிலக்கு அளிக்கப் பட்டிருக்கிறது என்று சொல்லும்போது, அந்த நிலங்கள் தோப்பு என்ற தன்மையில்லாமல் பொட்டல் தரிசுகளாக இருப்பதும், விளை நிலங்களாக இருப்பதும் தோப்பு என்ற கணக்கில் பலயிடங்களில் தவறுதல்கள் இருந்து

கொண்டுவந்திருக்கின்றன. ஆகவே அதைப் பற்றியெல்லாம் கண்டுபிடித்து அரசு இந்த உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் மிச்ச நிலங்கள் என்றெடுக்கிற நிலையில் ஏதாவது திட்டம் அரசின் பரிசிலனையில் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : 1959 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை தொடர்ந்து தோப்பாக இருந்தால் அதற்கு விதிவிலக்கு உண்டு. தோப்பாக இல்லாமல் ஏதாவது மாற்றினால் உடனே உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் அதை அரசு எடுத்துக்கொள்ளும்.

திரு. க. சுப்பு : ஒரு ஒழுங்குப் பிரச்சினை, 'இன் அட்மிஸிபிலிட்டி ஆப் தி கொஸ்டின்' பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். நில உச்சவரம்புச் சட்டத்தில் தோப்புகளுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டதா என்பது கேள்வி. அது சட்ட சம்பந்தப்பட்ட கேள்வி. சட்ட சம்பந்தப்பட்டவைபற்றி கேள்வி கேட்பது என்பது 'இன் அட்மிஸிபிள்'. சில பேர்களுக்கு 'இன் அட்மிஸிபிள்' கேள்விகளுக்குள் போக தாங்கள் அனுமதிக்கிறீர்கள். சில பேர்களை அனுமதிப்பதில்லை. நான் கேள்வி கேட்டால் 'இன்அட்மிஸிபிள்' என்று சொல்கிறீர்கள். ஆளுக்குத் தக்கபடி அனுமதிக்கிறீர்கள் என்று . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவர் அனுமதித்ததே தவறு என்று சொல்வது சரியல்ல. உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : சட்டம் நடைமுறையில் இருக்கிறதா என்று கேட்டதற்கு 'ஆம்' என்று சொல்லியிருக்கிறேன். சட்டம் நடைமுறையிலே இருக்கிறது. விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுப்பு அவர்கள் ஏதாவது ஒரு பிரச்னையை எழுப்ப வேண்டும் என்றே துடித்துக் கொண்டிருக்கிறார்கள். நேரம் காலம் பார்த்துக் கேட்க வேண்டும். திரு. பழனிவேல்.

திரு. என். பழனிவேல் : இந்த சாப்டூர் ஜமீந்தாருக்கு உள்ள தோப்புகளுக்கு விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அது எவ்வளவு ஏக்கர்கள்? என்னென்ன மரங்கள் அந்தத் தோப்புகளில் இருக்கின்றன? திரு. முத்தையா அவர்கள் தோப்பு இல்லாத இடங்களும் இருப்பதுபோல் கூறினார்கள். ஆகவே அங்கு என்னென்ன மரங்கள் இருக்கின்றன, எவ்வளவு ஏக்கர்கள் உள்ளன என்பதை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

1979 நவம்பர் 2]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்கிற போது சாப்டூர் ஜமீனைப் பற்றி சொல்லவில்லை. இருந்தாலும் சாப்டூர் ஜமீன்தாருக்கு 4,440.54 ஏக்கர் விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அது இப்பொழுது கொடுக்கப்பட்டது அல்ல, 1955-ம் வருஷத்திலிருந்து தோப்பாக கணக்கில் காட்டப்பட்டிருக்கிறது. நில உச்ச வரம்பு சட்டத்தின் அடிப்படையில் விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு அந்த ஜமீனைப்பற்றி சில மனுக்கள் வந்திருக்கின்றன. சில காடுகளில் சில மரங்கள் வெட்டப்பட்டிருக்கின்றன என்று. அதைப்பற்றி அரசு ஆராய்ந்து தோப்புகள் இல்லாத நிலங்களை உச்சவரம்புச் சட்டத்தின்படி அரசு எடுத்துக் கொள்ளும்.

திரு. என். பெருமாள்: பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக அரசு புறம்போக்கு நிலங்களை முன்பு இருந்த அரசில் இருந்தவர்கள் தங்கள் பெயரிலும், உறவினர், தங்கள் மனைவி மக்கள் பெயரிலும் பட்டா எழுதி வைத்துக் கொண்டுள்ளனர். அப்படிப்பட்ட நிலங்கள் ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் இருக்கின்றன. அவைகளையெல்லாம் முள் வேலிகள் வளர்த்துக் கொண்டு, தோப்பு என்று காட்டியிருக்கிறார்கள். அவைகளை உடனடியாக அரசு எடுத்து ஜனங்களுக்கு பகிர்ந்து அளிக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆயிரக்கணக்கில் எடுத்துக் கொண்டிருந்தாலும் சரி, அவைகளை எல்லாம் அரசு எடுத்து நிலம் அற்றவர்களுக்கு கொடுக்கப்படும்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தலைவர் அவர்களே, சாப்டூர் ஜமீன்தாருக்கு தோப்பாக 4 ஆயிரத்துக்கு அதிகமான நிலங்கள் விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன. 1955 ஆம் ஆண்டு என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தோப்புக்கு என்று இத்தனை ஏக்கர் விதி விலக்கு அளிக்க வேண்டும் என்று முறை செய்து அதனை குறைத்து, இன்னும் அதிகமான நிலங்களை அரசு எடுக்கலாம், அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: 1955-லிருந்து அவர்களுக்கு கொடுக்கப்பட்டது என்று சொல்லவில்லை, 1955-லிருந்து தோப்பாக இருந்து வருகிறது என்றுதான் சொன்னேன். அதற்குப்பிறகு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தோப்புக்கு எவ்வளவு என்று வரையறை எல்லாம் இப்பொழுது முன்கூட்டியே உங்களுக்குச் சொல்ல முடியாது.